1979 பிப்ரவரி 17]

சகல போக்குவரத்துகளும் இந்த ரோடு வழியாகத் திருப்பி விடப்படுகின்றன. கணபதி-உருமண்டம் பாளையம் சாலை மூன்று பஞ்சாயத்துக்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அதை நேரடியாக ஹைவேஸ் ரோடாக மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற சாலையின் பெரும்பகுதி ஊராட்சி ஒன்றியத்தின் கீழும், ஊராட்சியின் கீழும் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல அந்தச் சாலையின் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளது. தமிழகத்தில் ஒட்டு மொத்தமாக 38,000 கிலோ மீட்டருக்கு மேற்பட்ட சாலைகள் ஊராட்சி ஒன்றியத்தின் கீழும், ஊராட்சிகளின் கீழும் இருந்து வருகிறது. ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலைமை சரியாக இல்லாத காரணத்தால் செப்பனிடப்படாத சூழ்நிலை இருந்து வருகிறது. அரசினுடைய நிதிநிலையும் ஒரு வரம்புக்குட்பட்டு இருக்கும் காரணத்தால் 38,000 கிலோ மீட்டர் சாலைகளையும் ஒரே ஆண்டில் அரசு எடுத்துக்கொள்ள இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சாலையின் முக்கியத்துவத்தை அரசு ஏற்கனவே அறிந்து 92,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டு வரும் ஆண்டில் அது எடுத்துக் கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

பல்லவன் போக்குவரத்துக் கழகப் பணியாளர்கள்.

*வினா எண். 73—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு துறைகளிலிருந்து பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் அலுவல் பார்க்கும் அதிகாரிகள் (on deputation) எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அவர்களுக்கு சிறப்பு ஊதியம் மற்றும் விடுமுறை, மருத்துவ வசதி அளிப்பது எந்த விதியின் கீழ் பின்பற்றப் படுகிறது?

(இ) இந்த சலுகைகள் பல்லவன் போக்குவரத்துக் கழக பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிறதா?

(ஈ) இல்லையெனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 61

(ஆ) அவர்களுக்கு சிறப்பு ஊதியம் நடைமுறையில் இருக்கும் அரசு ஆணைகளின்படி கொடுக்கப்படுகிறது.

விடுமுறை: அவர்களுக்கு தமிழ்நாடு விடுப்பு விதிகள் 1933 (TNLR 1933) கீழ் விடுப்பு அனுமதிக்கப்படுகிறது.

மருத்துவ வசதி: அவர்களுக்குக் கழக அதிகாரிகளுக்கு அளிக்கப்படுவதுபோல உடல் நலப்படியோ அல்லது அவர்கள் சார்ந்த அரசு அலுவலகங்களில் அளிக்கப்படும் மருத்துவ ஈட்டு வசதியோ அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப அளிக்கப்படுகிறது.

(இ) & (ஈ) பல்லவன் போக்குவரத்துக்கழகத்தில் முகமையில் உள்ளவர்கள் அரசு அலுவலகங்களில் உள்ள வேலை நேரப்படி பணிபுரியாமல் கூடுதலாக பணி புரிவதாலும் வருடத்தில் 9 நாட்கள் மட்டுமே விடுமுறை பெறுவதாலும் சிறப்பூதியம் பெறுகின்றனர். பல்லவன் போக்குவரத்துக்கழக ஊழியர்கள் தொடர் ஊதிய திட்டப்படி (Longevity pay scheme) ஊதியம் பெறுகின்றனர். அக்கழக விதிகளின்படி அதன் ஊழியர்கள் வேலை செய்யவேண்டியவர்கள் ஆதலால் அவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்கப்படுவதில்லை. அவர்களுக்கு விடுப்பும் மருத்துவ வசதியும் தொடர் ஊதிய திட்டப்படியே (Longevity pay scheme) கொடுக்கப்படுகிறது.

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : அரசு ஊழியர்களுக்குத் தருவதைப் போன்று சலுகைகள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே உள்ள அதிகாரிகளுக்கும் மற்ற ஊழியர்களுக்கும் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, லாஞ்சிவிட்டி பேஸ்கீம் என்று சொல்லப்படுகிற தொடர் ஊதியத் திட்டப்படி பல்லவன் போக்குவரத்துக்கழகம் ஏற்கனவே நிரந்தரமாக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப் படுகிறது. ஆகவே அரசு ஊழியர்களுக்கு உள்ள சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் எண்ணம் இல்லை.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழக சென்னை டெப்போக்களிலே தினசரி 10, 15 டிரைவர்கள், கண்டக்டர்கள் வெளிப்பணிக்கு செல்வதாக கையெழுத்துப் போட்டுவிட்டு பணியாற்றாமல் டிப்போவிலேயே சுற்றி வருகிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையிலே 200-க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள் தேவைப் படுகிற காரணத்தால் அவர்களைப் பணியில் எடுக்கின்ற எண்ணம் இருக்கிறது. இருக்கின்ற பணியாளர்கள் கையெழுத்துப் போட்டு விட்டு வேலை செய்யாத சூழ்நிலை இல்லை. அதைப்பற்றி ஏதேனும் உறுப்பினர் அவர்கள் குறிப்பு கொடுப்பார்களானால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவ மனைகள்.

* வினா எண் 74—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியத்தில் உள்ள அம்மையப்பன், கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு ஏற்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்கப்படும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தாழை மு. கருணாநிதி : ஒரு யூனியனுடைய தலைமையிடத்தில் அதிகமான பொதுமக்கள் வாழ்கிற இடம். இந்த ஒன்றியத்திலே ஒரு அரசு மருத்துவமனையும் இல்லாத காரணத்தால் அங்கே எல். ஐ. எம். டாக்டர்தான் பணியாற்று கிறார். அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இனியாவது அரசு மருத்துவமனையை அமைக் கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அங்கிருந்து மக்களால் இது சம்பந்தமாக தங்களுக்கு ஒரு மருத்துவமனை வேண்டுமென்று விண்ணப்பம் தரப்பட்டு அந்த விண்ணப்பம் இப்போது ஆய்வு செய்வதற்காக மாவட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டு அவரிடமிருந்து வருகின்ற ஆய்வு அறிக்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மேலும், 1977–78 ஆம் ஆண்டு அந்தப் பகுதியிலே இருக்கிற 5,6 தரத்தைச் சேர்ந்த பிரிவுகளிலே உள்ள மருத்துவமனைகள் 6-ஐ எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சுமார் 20 இதுபோன்ற ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த